EPRLF இன் பத்திரிகை

புதிய கண்ணோட்டம் 1988 புரட்டாசி 01





# 86ல் விஜிதரன் கடத்திக் கொலை! 87ல் ரஜனாரன் மயிரிழையில் உயிர் தப்பினார்! 88ல் விமலேஸ்வரன்...

புதிய கண்ணோட்ட 1/9/88

தடியெடுத்த தண்டல்காரர்களின் சண்டித்தனத்திற்கு எதிராக

தமிழ் மாணவர்களே எப்போது விழித்தெழப்போகிறீர்கள்?

கடந்த ஆடி மாதம் 18 ம் திகதி நண்பகல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வணிகபீட மாணவன் த.விமலேஸ்வரனை கொலை விசர் பிடித்திருக்கும் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

கல்விமான்களும், மாணவர்களும் மக்களிடையில் சரியான சிந்தனையோடு முற்போக்காய்ச் செயற்பட எத்தனிப்பவர்கள் எல்லோரும் ........ இப்படியே தொடர்ந்து கொலை செய்யப்பட்டுவருகின்ற 'நாகரிக வளர்ச்சியை' மௌனமாகவே அங்கீகரிக்கப் போகிறீர்களா?

மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள், மக்களை நேசித்துச் செயற்படுபவர்கள் எல்லோரையும் சுட்டுக்கொன்றுவிட்டு அதிகாரத்தை நிலைநாட்ட நினைக்கும் இந்தக் கொலை விசர் நோயாளிகளை நீங்கள் தொடர்ந்தும் ஊக்கமளிப்பீர்களானால்—

எதிர்காலம், துப்பாக்கிகளால் மக்கள் வாயை அடைத்துவைக்கும் சண்டியர் கூட்டத்திற்குத் தலை வணங்குவதாகவே அமையும்,

அந்நிய நாட்டுப் படைகளைத் துரத்த வேண்டும்; அரச படைகளை எதிர்த்துத் தற்காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கெல்லாம்—

'எங்கட பொடியள் நினைத்தபடியெல்லாம் எங்களுக்குள்ளேயே சுட்டுக் கொலைகள் செய்துகொண்டிருப்பதை அங்கீகரிப்பது' என்றா அர்த்தப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்?

1986 ஐப்பசி 4 ம் திகதி யாழ். பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் புலிகளினால் கடத்திக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஜனநாயகப் போராட்டத்திற்கு தலைமை தாங்கியவன் என்ற காரணத்தினாலேயே இப்போது விமலேஸ்வரனைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

சாதியொடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் வறிய கூலி விவசாயிகளை, கிராமியத் தொழிலாளர்களை ஸ்தாபனரீதியாக ஒன்றிணைப்பதிலும் அவர்களை அறிவியல்ரீதியாக வளர்ப்பதிலும் தன் பங்கினை ஆற்றி வந்த விமலேஸ்வரனைப் பழிவாங்கும் வெறியினால் புலிகள் கொலை செய்துள்ளனர்.

தட்டிக்கேட்க யாருமில்லாத சண்டப் பிரசண்டர்களாய் இப்படித் தான்தோன்றித்தனமாய்க் கொலைகள் புரிவோம் என்று அடிக்கடி நிரூபித்துக்காட்டியே மக்களைப் பயமுறுத்திய நிலையில் வைத்திருக்கும் இந்தக் கொலை விசர்க் கூட்டத்தினரிடமிருந்து ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் விடுதலை செய்வது எப்போ?